# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2026/25 - 2017 ජූලි මස 05 වැනි බදාදා - 2017.07.05

*2026/25 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 5/ 2016*

***1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டம்***

*1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டத்தின் (6) (உ) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 24 ஆம் பிரிவின்கீழ் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்.

கொழும்பு,
*2017, யூன் 27.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கூட்டாட்சியாதன (கட்டணங்களை அறவிடுதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவைகளுக்காக சொல்லப்பட்ட அதிகாரசபையினால் 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 6(உ) வின்கீழ் அறவிடப்படும் கட்டணங்கள், இதற்கான அட்டவணையில் தரப்படுதல் வேண்டும் :-

**அட்டவணை**

1.

| சான்றிதழ்களை வழங்குவது தொடர்பிலான கட்டணங்கள் | | |
|---|---|---|
| 1. விண்ணப்பக் கட்டணம் | **விதித்துரைக்கப்பட்ட கட்டணம்** | |
| கூட்டாட்சியாதனம், பகுதியளவிலான கூட்டாட்சியாதனம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதனம் ஒன்றிலுள்ள பொது அம்சங்களுக்காகவும் பொதுவாழ்வசதிகளுக்காகவும் பொது முகாமையாளரின் சான்றிதழைப் பெறுவதற்காகச் செலுத்தப்பட வேண்டிய விண்ணப்பக் கட்டணம். | ரூபா. 500.00 | |
| | கட்டணத்துடன் சேர்த்து அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஏனைய வரிகள் சேர்க்கப்படுகின்றன. | |
| 2. முதனிலை அனுமதியளிப்புக் கடிதத்துக்கான செய்முறைப் படுத்தற் கட்டணம் | முதனிலை அனுமதியளிப்புக் கடிதத்தைப் பெறுகின்ற நேரத்தில் செய்முறைப்படுத்தற் கட்டணத்தின் 25% செலுத்தப்பட வேண்டும். | |
| 3. ஒரு கூட்டாட்சியாதனம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட விண் ணப்பங்களுக்கான செய்முறைப்படுத்தற் கட்டணங்கள். | <u>வதிவிட விதித்துரைக்கப் பட்ட கட்டணம்</u> | <u>வர்த்தக ரீதியிலான விதித்துரைக்கப் பட்ட கட்டணம்</u> |
| | 1 $S^2$வுக்கு | |
| 0 - 500$m^2$ | ரூபா. 30.00 | ரூபா. 50.00 |
| 501$m^2$- 1,000$m^2$ | ரூபா. 75.00 | ரூபா. 150.00 |
| 1,001$m^2$- 3,000$m^2$ | ரூபா. 250.00 | ரூபா. 450.00 |
| 3,001$m^2$– 5,000$m^2$ | ரூபா. 300.00 | ரூபா. 500.00 |
| 5001$m^2$க்குமேற்பட | ரூபா. 600.00 | ரூபா. 850.00 |
| | கட்டணத்துடன் சேர்த்துஅரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஏனைய வரிகள் சேர்க்கப்படுகின்றன. | |
| 4. தற்போதைக்கான சான்றிதழை/ பகுதியளவிலான சான்றித ழைப் பெற்ற பின்னர் மற்றும் நிர்மாணம் கட்டிமுடிக்கப்பட்ட பின்னர் இறுதிச் சான்றிதழ் பெறப்படுதல் வேண்டும். | விதித்துரைக்கப்பட்ட கட்டணம் | |
| 0$m^2$- 1,000$m^2$ | ரூபா. 2,000.00 | |
| 1,001$m^2$- 3,000$m^2$ | ரூபா. 110,000.00 | |
| 3,001$m^2$– 5,000$m^2$ | ரூபா. 150,000.00 | |
| 5,001$m^2$– 10,000$m^2$ | ரூபா. 200,000.00 | |
| 10,001$m^2$– 20,000$m^2$ | ரூபா. 250,000.00 | |
| 20,001$m^2$ – 30,000$m^2$ | ரூபா. 300,000.00 | |
| 30,001$m^2$ – 40,000$m^2$ | ரூபா. 350,000.00 | |
| 40,001$m^2$ – 50,000$m^2$ | ரூபா. 400,000.00 | |
| 50,001$m^2$க்குமேற்பட | ரூபா. 450,000.00 | |
| | கட்டணத்துடன் சேர்த்துஅரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஏனைய வரிகள் சேர்க்கப்படுகின்றன. | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | |
|---|---|
| 5. மேல் மாகாணத்தின் எல்லைக்கு வெளியே நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சியாதனங்களுக்கான வெளிக்களச் சோதனைக் கட்டணம். | போக்குவரத்துக் கட்டணங்கள்<br>(i) ஐந்து கூட்டாட்சியாதன கூறுகள் அல்லது அதற்கு குறைவான கூட்டாட்சியாதன துண்டுகள் – கி.மீ ஒன்றுக்கு ரூ.12.00<br>(ii) ஐந்துக்கு மேற்பட்ட கூட்டாட்சியாதன துண்டுகளின் கூட்டாட்சியாதன கூறுகள் - கி.மீட்டர் ஒன்றுக்கு ரூ.20.00<br>போக்குவரத்து கட்டணங்களுடன் சேர்த்து அரசாங் கத்தினால் விதிக்கப்படும் ஏனைய வரிகள் சேர்க்கப்படு கின்றன. |
| 6. கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சியாதனங்களுக்கான சோதனைக் கட்டணம். | அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரிகளுடன் சேர்த்து கி.மீட்டர் ஒன்றுக்கான போக்குவரத்துக் கட்டணம் ரூபா 20.00 கொழும்பு நகர எல்லைக்கு வெளியே மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் நடாத்தப்படும் சோதனைக்காக |
| 7. பகுதியளவிலான அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி வரை படத்தின் புதுப்பித்தல் (வருடாந்தம்) | **<u>விதித்துரைக்கப்பட்ட கட்டணம்</u>**<br>1 $s^2$வுக்கு<br>1,000$m^2$வரை — ரூபா. 2,000.00<br>1,001$m^2$- 3,000$m^2$ — ரூபா. 7,500.00<br>3,001$m^2$– 5,000$m^2$ — ரூபா. 15,000.00<br>5,001$m^2$– 10,000$m^2$ — ரூபா. 20,000.00<br>10,001$m^2$க்கு மேற்பட — ரூபா. 25,000.00<br>கட்டணத்துடன் சேர்த்து அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஏனைய வரிகள் சேர்க்கப்படுகின்றன. |
| 8. பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதனமொன்றின் சதுர மீற்றர் களிலான பரப்பளவு, திருத்தங்கள் செய்யப்பட்டுள்ள போதிலும் மாற்றமடையாதுள்ள போது பெயரளவிலான கட்டணத்தை அறவிடுதல். | **<u>விதித்துரைக்கப்பட்ட கட்டணம்</u>**<br>கூட்டாட்சியாதனக் கூறுகளின் எண்ணிக்கை — கட்டணம்<br>05 கூறுகளுக்கு குறைவாக — ரூபா. 1,000.00<br>06-10 வரையிலான கூறுகள் — ரூபா. 2,500.00<br>11-20 வரையிலான கூறுகள் — ரூபா. 5,000.00<br>21-30 வரையிலான கூறுகள் — ரூபா. 15,000.00<br>31-40 வரையிலான கூறுகள் — ரூபா. 25,000.00<br>41-50 வரையிலான கூறுகள் — ரூபா. 30,000.00<br>50 கூறுகளுக்கு மேற்பட — ரூபா. 50,000.00<br>கட்டணத்துடன் சேர்த்து அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஏனைய வரிகள் சேர்க்கப்படுகின்றன. |
| 9. தற்போதைக்கான அல்லது பகுதியளவிலான கூட்டாட்சிச் சான்றிதழுக்கான செய்முறைப்படுத்தற் கட்டணம் | இறுதிச் சான்றிதழைப் பெறுகின்ற நேரத்தில் செலுத்தப்பட்ட கட்டணத்தின் 50% முற்பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.<br><br>கட்டணத்துடன் சேர்த்து அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஏனைய வரிகள் சேர்க்கப்படுகின்றன. |
| 10. வழங்கப்பட்ட சான்றிதழ்களின் உண்மைப் பிரதியொன்றைப் பெறுவதற்கு | ரூபா.1,500.00<br><br>கட்டணத்துடன் சேர்த்து அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஏனைய வரிகள் சேர்க்கப்படுகின்றன. |

2. ஒரு கூட்டாட்சியாதனத்தின் கூட்டாட்சி அந்தஸ்தை முடிவுறுத்துவதற்கு/ ஒரு கூட்டாட்சியாதனத்தை இடித்தளிப்பதற்கு (சட்ட ஏற்பாடுகளுக்கமைய) அதிகாரசபையின் சம்மதத்துக்காகத் திறத்தவர்கள் விண்ணப்பமொன்றைச் செய்யும்போது, செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள் பின்வருமாறாகும் (அரசாங்க வரிகளுக்கமைய).

ஓர் உளதாம் கூட்டாட்சியாதனத்தை முடிவுறுத்துவதற்கு/ ஒரு கூட்டாட்சியாதனத்தைக் கழற்றிவிடுவதற்கு அதிகாரசபையின் அங்கீகாரத்தை நாடித் திறத்தவர்களினால் வேண்டுகோளொன்று செய்யப்படும்போது கட்டணம் விதிக்கும் திட்டம்.

| | | |
|---|---|---|
| ஒரு கூட்டாட்சியாதனமாகப் பதிவுசெய்யப்பட்ட கட்டிடத்துக்காகச் கூட்டாட்சித் திறத்தவர்களினால் கூட்டாட்சி முகாமை அதிகாரசபையின் அங்கீகாரத்தை நாடிச் செய்யப்பட்ட வேண்டுகோளுக்காக விதிக்கப்பட்ட கட்டணம். | **விதித்துரைக்கப்பட்ட கட்டணம்** | |
| | கூட்டாட்சியாதனக் கூறுகளின் எண்ணிக்கை | கட்டணம் |
| | கூறுகள் 2-5 | ரூபா 2,000.00 |
| | கூறுகள் 6-10 | ரூபா 5,000.00 |
| | கூறுகள் 11-25 | ரூபா 7,500.00 |
| | 26 கூறுகளுக்கு மேல் | ரூபா 15,000.00 |
| | கட்டணத்துடன் சேர்த்துஅரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஏனைய வரிகள் சேர்க்கப்படுகின்றன. | |
| | **விதித்துரைக்கப்பட்ட கட்டணம்** | |
| **வெளிக்களச் சோதனைக் கட்டணம்** | மேல் மாகாணத்துக்கு வெளியே அமைந்துள்ள ஆதனங்களைப் பரிசோதிப்பதற்குத் தேவைப்படும்போது, ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 30/= என்ற போக்குவரத்துக் கட்டணம் அறவிடப்படுகின்றது.<br><br>கூட்டாட்சியாதனம் கொழும்பு நகர எல்லைகளுக்கு வெளியே மேல் மாகாணத்தில் அமைந்துள்ளபோது, வெளிக்களச் சோதனை கட்டணமாக ரூபா 7,500/= என்ற கட்டணம் வெளிக்களச் சோதனைக் கட்டணமாக அறவிடப்படுகின்றது.<br><br>கட்டணத்துடன் சேர்த்து அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஏனைய வரிகள் சேர்க்கப்படுகின்றன. | |

07-579/1

---

ச.வ.பீ 5/2016

**1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம்**

1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சர்.

கொழும்பு,
2017, யூன் 27.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கூட்டாட்சியாதன (முகாமை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

**சான்றிதழ்களின் வழங்குகை**

2. (1) சட்டத்தின் 3அ (2) (i) என்னும் பிரிவின்கீழ் (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் பொது முகாமையாளரினால் வழங்கப்பட்ட பொது வாழ்வசதிகள் மற்றும் பொது அம்சங்கள் பற்றிய சான்றிதழொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு உட்கருதுகின்றவரான ஏதேனும் கூட்டாட்சியாதனத்தின் உரிமையாளர், இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்திலான விண்ணப்பமொன்றை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) சட்டத்தின் 3ஆ (2) (ஊ) என்னும் பிரிவின்கீழ் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொது வாழ்வசதிகள் மற்றும் பொது அம்சங்கள் பற்றிய சான்றிதழொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு உட்கருதுகின்றவரான ஏதேனும் தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்தின் உரிமையாளர் இதற்கான அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள படிவத்திலான விண்ணப்பமொன்றை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) சட்டத்தின் 3இ (2) (ஊ) என்னும் பிரிவின்கீழ் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொது வாழ்வசதிகள் மற்றும் பொது அம்சங்கள் பற்றிய சான்றிதழொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு உட்கருதுகின்றவரான ஏதேனும் பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் உரிமையாளர் இதற்கான 3 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான விண்ணப்பமொன்றை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. (1) ஒழுங்குவிதி 2 இன்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் ஆதனத்தின் உரிமையாளரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்:-

(அ) பதிவுசெய்யப்பட்ட உரிமமளிக்கப்பட்ட நிலஅளவையாளரினாலும் தயாரிக்கப்பட்டுக் கையொப்பமிடப்பட்ட இயைபான கூட்டாட்சி வரைபடம், தற்போதைக்கான கூட்டாட்சி வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம்;

(ஆ) பொது வாழ்வசதிகள் தொடர்பான சேவைகளும் திட்டங்களும் பற்றிய அறிக்கை; இவ்வறிக்கை, இயைபான துறைகளில் முறையாகத் தகைமைபெற்ற ஆட்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்;

(இ) இயைபான உள்ளூரதிகாரசபையினால் அல்லது திட்டமிடுதல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட இயைபான கட்டிட வரைபடம்;

(ஈ) தற்போதைக்கான கூட்டாட்சிக் காணித்துண்டுகள் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சிக் காணித்துண்டுகள் தொடர்பான விண்ணப்பமொன்றின் விடயத்தில், கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான செல்லுபடியான கட்டிட அனுமதிப்பத்திரம்;

(உ) கூட்டாட்சி வரைபடத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தின் விடயத்தில், கட்டிமுடித்த கட்டடத்துக்காகப் பெறப்பட்ட இசைந்தொழுகுகைச் சான்றிதழ்;

(ஊ) கட்டிடத்தின் கட்டமைப்புசார் வரைபடம் மற்றும் சிவில் சேவை நிர்மாண பொறியியலாளரினால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்;

(எ) கூட்டாட்சியாதனத்தின் காப்புறுதிச் சான்றிதழ்;

(ஏ) விண்ணப்பத்தின் விடயப்பொருள் தொடர்பான ஓர் உரித்தறிக்கை; அத்துடன்

(ஐ) அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஆவணங்கள்.

(2) மேலே (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எல்லா ஆவணங்களும் முப்பிரதிகளில் இருத்தல் வேண்டும்.

(3) பந்தி 3(1) இன் உட்பந்தி (ஆ)வில் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறாக இயைபான துறைகளில் முறையாகத் தகைமைபெற்ற ஆட்கள், இதற்கான அட்டவணை 4 இல் குறித்துரைக்கப்படுகின்றனர்.

4. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தைக் கவனத்திற்கொள்ளும் நோக்கத்துக்காக, உரிமையாளர், முற்போந்த ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து, உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி வேலையின் பொருத்தமாந்தன்மை பற்றித் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்வதற்கு அவசியமென அதிகாரசபை கருதக்கூடியவாறான எவையேனும் வரைபடங்களுடன் ஆதனத்தின் எதிர்காலப் பேணுகைக்காகச் செய்யப்பட்ட ஒழுங்கேற்பாடுகளைக் காட்டுகின்ற ஏதேனும் சான்றுப்படுத்தப்பட்ட தகவல்களைக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

5. ஒழுங்குவிதி 2 இன்கீழ் விண்ணப்பத்துடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டாட்சி வரைபடம், தற்போதைக்கான கூட்டாட்சி வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம்:-

(அ) பதிவுசெய்யப்பட்ட, உரிமமளிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்டவொரு நில அளவையாளரினால் அல்லது நில அளவையாளர் தலைமையதிபதியினால் அந்நோக்கத்துக்காக முறையாக அதிகாரமளிக்கப்பட்டவோர் ஆளினால் தயாரிக்கப்பட்டுக் கையொப்பமிடப்படுதல் வேண்டும்;

(ஆ) சட்டத்தின் ஏற்பாடுகளினதும் இவ்வொழுங்குவிதிகளினதும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவிருத்தல் வேண்டும்;

(இ) பின்வரும் ஒழுங்குவரிசைப்படி இருத்தல் வேண்டும்:-

(i) அட்டைப்பக்கம்;
(ii) சுட்டி;
(iii) மரபு வழியுடன் காணியையும் கட்டிடத்தையும் குறித்துக்காட்டுகின்ற நிலஅளவை வரைபடம்;
(iv) கட்டடத்தின் வகையும் கட்டடத்தின் பாவனையும் உரித்துப் பற்றிய விபரங்களும்;
(v) எல்லைகளுடன் கூட்டாட்சிக் காணித்துண்டுகளையும், துணைச் சிறுகூறுகளையும் பொது அம்சங்களையும் காட்டுகின்ற அவசியமான விபரங்களுடன் மாடிகளுக்கான வரைபடம்;
(vi) அத்தகைய கூட்டாட்சிக் காணித்துண்டின் எல்லைகளைக் கொண்டுள்ள அட்டவணை, வரிமதிப்பீட்டிலக்கம், எல்லை பற்றிய விபரங்கள், பரப்பளவு மற்றும் பங்குப்பெறுமதியின் நூற்றுவீதம்;
(vii) பொது அம்சங்கள் பற்றியநிரல்;
(viii) ஒவ்வொரு காணித்துண்டினதும் பரிமாண வரைபடம்;
(ix) செங்குத்தான பிரிவு; அத்துடன்
(x) அவசியமென அதிகாரசபை கருதக்கூடியவாறான வேறெவையேனும் விபரங்கள்.

6. கூட்டாட்சி வரைபடத்தை, தற்போதைக்கான கூட்டாட்சி வரைபடத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தைத் தயாரிக்கும் போது, பின்வரும் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படுதல் வேண்டும்:-

(அ) வரைபடமானது முப்பிரதிகளில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரைபடத்தின் முதலாவது பக்கத்தில், விடயத்துக்கேற்ப, "மூலப்பிரதி", "இணைப்பிரதி" மற்றும் "முப்பிரதி" என்னும் சொற்கள் வாசிக்கத்தக்கதாக எழுதப்படுதலும் வேண்டும்;

(ஆ) வரைபடத்தின் ஒவ்வொரு பக்கத்திலும், மேல் வலதுபக்க மூலையில், வரைபடத்தின் இலக்கத்துடன்சேர்த்து, விடயத்துக்கேற்ப, "கூட்டாட்சி வரைபடம்", "தற்போதைக்கான கூட்டாட்சி வரைபடம்", "பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம்", 'மீள்பிரிவிடுகை வரைபடம்", அல்லது "ஒன்றுசேர்க்கப்பட்ட வரைபடம்" என்னும் சொற்கள் எழுதப்படுதல் வேண்டுமென்பதுடன் வரைபடத்தின் நோக்கத்தையும் குறித்துரைத்தலும் வேண்டும்;

(இ) வரைபடத்தின் ஒவ்வொரு பக்கமும் பின்வரும் முறையில் மேல் வலதுகை மூலையில் இலக்கமிடப்படுதல் வேண்டும்; அதாவது, 10 பக்கங்கள் இருக்கும் போது, முதலாம் பக்கத்திலிருந்து தொடங்குகின்ற ஒவ்வொரு பக்கமும், 10 இன் 1, 10 இன் 2, 10 இன் 3 எனவும் அவ்வாறாகவும் இலக்கமிடப்படுதல் வேண்டும்.

(ஈ) "A' தரத் தாளைப் பயன்படுத்தி வரைபடம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகள் இருப்பின் மற்றும் முதலாவது தொகுதி 10 பக்கங்களைக் கொண்டிருப்பின், இரண்டாவது தொகுதி 20 இன் 11 என்னும் தொடர்ச்சியான இலக்கத்துடன் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்;

(உ) வரைபடமானது, வாசிக்கத்தக்க அளவினவான எழுத்துக்களில் அச்சிடப்படுதல் அல்லது கையினால் எழுதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஓர் அட்டைப் பக்கத்தையும் சுட்டியையும் கொண்டிருத்தலும் இதழ்களை ஒழுங்கமைப்பதில் ஒழுங்குவிதி 5(1) இல் தரப்பட்டுள்ளவாறான ஒழுங்குவரிசைக்கு அமைந்தொழுகுதலும் வேண்டும். ஒரு பக்கத்தின் தடிப்பம், 120 கிராம்களாக அல்லது அதற்கதிகமாகவிருத்தல் வேண்டும். (ஒரு இதழின் எடை, ஒரு சதுர மீற்றருக்கு 120 கிராம்களுக்கு அதிகமாக இருத்தல் வேண்டும்). வரைபடமானது பலமாகக் கட்டப்பட்ட ஒரு புத்தகத்தின் வடிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும். அட்டைப் பக்கத்தில் வரைபடத்தின் நோக்கமும் இலக்கமும், நில அளவையாளரின் முகவரியும் ஏனைய இயைபான விபரங்களும் அச்சிடப்படுதல் அல்லது கையினால் எழுதப்படுதல் வேண்டும் என்பதுடன், எவையேனும் விளம்பரங்களையோ அல்லது படங்களையோ கொண்டிருத்தலுமாகாது;

(ஊ) வரைபடத்தைத் தயாரித்த நில அளவையாளர், வரைபடத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் தமது கையொப்பத்தையிட்டு இலச்சினையையும் பொறித்தல் வேண்டும்.

7. கூட்டாட்சி வரைபடம், தற்போதைக்கான கூட்டாட்சி வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம் என்பவற்றிலான குறித்தசில விபரங்கள் பின்வரும் முறையில் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்:-

(i) கூட்டாட்சிக் காணித்துண்டொன்றின் பாகங்கள் உட்புற அணுக்கத்துடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தளங்களைக்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில், வரைபடத்தில் அதியுச்சக் கூட்டாட்சிக் காணித்துண்டின் பாகங்கள், ஒவ்வொரு மாடி தொடர்பிலும், அத்தகைய ஒவ்வொரு பாகத்தினதும் எல்லைகள், ஒழுங்குவிதி 5 (இ) (vi) இன்கீழ் தயாரிக்கப்பட்ட அட்டவணையில் அதன் பாவனையைச் சுட்டிக்காட்டுகின்றனவாக, "1 ஆவது தளப்பாகம்", "2 ஆவது தளப்பாகம்" முதலியனவாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். கூட்டாட்சிக் காணித்துண்டின் மொத்தப் பரப்பளவு ஒவ்வொரு கூட்டாட்சிக் காணித்துண்டினதும் விபரங்களுடன் கணிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இயைபான பாகத்தின் பெறுமதியினது நூற்றுவீதம் சுட்டிக்காட்டப்படுதலும் வேண்டும்;

(ii) கூட்டாட்சியாதனமொன்று பராதீனப்படுத்தப்பட்ட காணியின் மீது நிறுவப்படுமிடத்து, இயைபான கூட்டாட்சி வரைபடம், கட்டடத்தின் மேற்பரப்பு எல்லையைச் சுட்டிக்காட்டுகின்ற எல்லைக்குறிப்புடன் சேர்த்து, கட்டடத்துக்கு வெளியே அமைந்துள்ள காணிகளின் எல்லைகளில் காணப்பட்ட பொது வடிகால்கள், ஊறவைத்தற்குழிகள் மற்றும் நச்சுத்தடைக்கழிவுத் தாங்கல் போன்ற எல்லா பொது அம்சங்களையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். ஏலவேயுள்ள கட்டடத்திலிருந்து உத்தேசிக்கப்பட்ட கட்டடமொன்றை வேறு பிரித்துக்காட்டுவதற்கான சுட்டிக்காட்டுகைகள் இருத்தல் வேண்டும்;

(iii) ஒவ்வொரு கட்டடத்துக்கும் செங்குத்தான பிரிவொன்று வரையப்படுதல் வேண்டும்; அதன் அளவுத்திட்டம் 1:100 அல்லது 1:200 என்பதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இருமாடிகளுக்கிடையேயான உயரத்தையும் ஒவ்வொரு தளத்தினதும் தடிப்பத்தையும் காட்டுதலும் வேண்டும்;

(iv) ஒரு கூட்டாட்சிக் காணித்துண்டின் முழுமொத்தப் பரப்பளவைக் கணக்கிடும்போது, வெளிப்புறச்சுவர்களின் மத்திய கோடு எல்லையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், கொங்குறீற்று வளைகள், சேவை மின்கம்பிவடக்குழாய் மற்றும் ஒருசதுர மீற்றருக்கு மேற்பட்ட பொது இடைவெளிகள் என்பன தவிர்க்கப்படுதலும் வேண்டும்;

(v) பங்குப்பெறுமதி நூற்றுவீதமும் பங்குப்பெறுமதியும், துணைச் சிறுகூறின் பரப்பளவுகளைப் பிரதான காணித்துண்டின் பரப்பளவுக்குச் சேர்ப்பதன் மூலம் கணிப்பிடப்படுதல் வேண்டும். துணைச் சிறுகூறுகளினதும் கூட்டாட்சிக் காணித்துண்டினதும் எல்லைகளும் பரப்பளவும் அட்டவணையில் தனிவேறாக அடையாளமிடப்படுதல் வேண்டும்;

(vi) கட்டிமுடிக்கப்பட்ட அல்லது உத்தேசிக்கப்பட்ட கூட்டாட்சிக் கட்டடத்தின் அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடத்தில் காட்டப்பட்ட காணியின் எல்லைகள், கூட்டாட்சி வரைபடத்தில் காட்டப்பட்ட காணியின் எல்லைகளைப்போன்று அதேவிதமானவையாகவிருத்தல் வேண்டும்;

(vii) தற்போதைக்கான கூட்டாட்சிக் கட்டடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சிக் கட்டடம் தொடர்பில் கூட்டாட்சி வரைபடமொன்று சமர்ப்பிக்கப்படும் நேரத்தில், கட்டட அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாந்தன்மை காலங்கடந்துபோனதாக இருத்தலாகாது என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட கட்டட அனுமதிப்பத்திரத்தின் குறிப்பீட்டிலக்கமும் தேதியும் கூட்டாட்சி வரைபடத்தில் சுட்டிக்காட்டப்படுதலும் வேண்டும்;

(viii) வதிவிட நோக்கம் மற்றும் வேறேதேனும் நோக்கம் போன்ற கலந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட கூட்டாட்சிக் கட்டடமொன்றின் விடயத்தில், வேறு பிரித்துக் காட்டும் இலக்கங்களுடனான தனிவேறான நிறுத்திடங்கள், கட்டடத்தின் பாவனைக்கு முட்டுக்கட்டையிடாமல் தனிவேறாக எல்லை குறிக்கப்படுதல் வேண்டும்;

(ix) ஒரு பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டடம் நிரந்தக் கோடுகளினால் அடையாளமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், உத்தேசிக்கப்பட்ட காணித்துண்டுகள், கட்டடத்தின் இலகுவான அடையாளங்காணுதலை இயலச்செய்யும் வகையில் தொடர்ச்சியற்ற கோடுகளின்மூலம் அல்லது வேறேதேனும் முறையைப் பயன்படுத்தி அடையாளமிடப்படுதலும் வேண்டும்;

(x) ஒவ்வொரு காணித்துண்டினதும் அமைவிடத்துக்கிணங்கவும் மாடி தொடர்பாகவும் குறித்தொதுக்கப்பட்ட தனிப்பட்ட இலக்கங்கள், வரிமதிப்பீட்டிலக்கம், ஏதேனுமிருப்பின், அது, மாடியின் அல்லது கொங்குற்றுத் தளத்தின் மத்திய கோடு தொடர்பாகக் காட்டப்பட்ட ஆறு பக்கங்களின் எல்லை விபரங்கள், காணித்துண்டுகளின் பரப்பளவு, பரப்பளவின் பங்குப் பெறுமதியின் நூற்றுவீதம், மிகக்கிட்டிய அருகாமையிலுள்ள பொது அணுகுவழி, பொது அம்சங்களின் விபரங்கள் என்பன வரைபடத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு காணித்துண்டினதும் எல்லைகள், வேறுபிரித்துக்காட்டப்படக்கூடியவகையில் அடையாளமிடப்படுதலும் ஒவ்வோர் அறையினதும் நோக்கத்துடன் சேர்த்து வரைபடத்தில் உள்ளடக்கப்படுதலும் வேண்டும்;

(xi) ஒரு கூட்டாட்சி வரைபடத்தைத் தயாரிக்கும்போது, இயலாமைக்குட்பட்டோர் தொடர்பான சட்டங்களும் கவனத்துட்கொள்ளப்படுதலும் வேண்டும்;

(xii) ஒரு பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி வரைபடத்தைத் திருத்துவதில், முன்னர் பதிவுசெய்யப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட பங்குப்பெறுமதியும் திருத்தப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட பங்குப்பெறுமதியும், வெவ்வேறு பெறுமதிகள் இலகுவாக அடையாளங்காணப்படக்கூடியவகையில் முறையே சிவப்பிலும் கறுப்பிலும் தனிவேறான நிரைகளில் காட்டப்படுதல் வேண்டும்;

(xiii) துணைச் சிறுகூறுகளின் சொத்துவம் கைமாற்றப்படும் சந்தர்ப்பத்தில் வேறு காணித்துண்டுக்கு அணுக்கத்துக்கான வசதியில்லாதவையும் பிரதான காணித்துண்டின் புறநீங்கலான பாவனைக்கு வரையறுக்கப்பட்டவையும் வரைபடத்தில் விவரிக்கப்பட்ட கூட்டாட்சிக் காணித்துண்டின் வெளிப்புற எல்லைகளுக்கு வெளியேயுள்ளவையுமான அடைக்கப்பட்ட மொட்டைமாடிகள் போன்ற துணைச் சிறுகூறின் எல்லைகளும், விபரங்களும், துணைச் சிறுகூறாக அட்டவணையில் தனிவேறாகச் சுட்டிக்காட்டப்படுதலும் பிரதான காணித்துண்டின் சதுரப் பரப்பளவுக்குச் சேர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், பங்குப்பெறுமதியின் நூற்றுவீதம் அதற்கிணங்கக் கணக்கிடப்படுதலும் வேண்டும்;

(xiv) கூட்டாட்சியாதனத்தைப் பதிவுசெய்வதற்கான பொறுப்பு கூட்டாட்சியாதனத்தின் உரிமையாளரின் மீதாக இருக்கின்றது.

## பாகம் II

## இடம் குறித்தொதுக்கல்

8. கூட்டாட்சியாதனத்தில் இடம் குறித்தொதுக்கலைத் திட்டமிடுவதில் பின்வரும் கருமங்கள் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) கூட்டாட்சியாதனமொன்றில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட காணித்துண்டுகள் உள்ளவிடத்து, முகாமைக் கூட்டுத்தாபனத்துக்காகக் கட்டடத்தில் இடமொன்று குறித்தொதுக்கப்படுதல் வேண்டும். அலுவலகமொன்றாகப் பயன்படுத்தப்படுவதற்கும் சாதனங்களை வைத்திருப்பதற்குமான அறையொன்றும் இருத்தல் வேண்டும்;

(ஆ) இயைபான எவையேனும் நோக்கங்களுக்காகக் கூட்டாட்சியாதனம் ஒன்றை பகுதியளவிலான கூட்டாட்சியாதனம் ஒன்றை அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதனம் ஒன்றை விற்பனை செய்வதற்கான உடன்படிக்கை கையொப்பமிடப்படும்போது அக்காணித்துண்டின் பரப்பளவு, பதிவுசெய்யப்பட்ட உரிமமளிக்கப்பட்ட நிலஅளவையாளரினால் தயாரிக்கப்பட்ட கூட்டாட்சி வரைபடத்தில் காட்டப்பட்ட பரப்பளவுக்குச் சமமானதாகவிருத்தல் வேண்டும்;

(இ) ஏதேனும் கூட்டாட்சிக் காணித்துண்டின் அல்லது அதன்பாகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நோக்கத்தை மாற்றுவதற்கான தேவை எழுமிடத்து, அதிகாரசபையின் ஒருப்பாட்டுடன் சேர்த்து திட்டமிடுதல் அதிகாரசபையிடமிருந்து எழுத்திலான முன்னங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்;

(ஈ) பிரதான நீர்வழங்கல் முறைமையை அல்லது நீர் சேகரிப்புத் தாங்கிகளை வழங்குதல், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்;

(உ) மின்வழங்கல் மற்றும் நீர்வழங்கல் மானிகள், பொது அம்சங்கள் வழங்கப்படுகின்றவோர் இடத்தில் உறுதியாகப் பொருத்தப்படுதல் வேண்டும்;

(ஊ) வேறு காணித்துண்டுகளின் ஊடாக வழங்கப்படும் விடயங்களில் கூட்டாட்சியாதனத்தின் ஒவ்வொரு காணித்துண்டினதும் சேவைக்குழாய்களினால் பயன்படுத்தப்பட்ட இடம், கூட்டாட்சி வரைபடத்தில் பொது அம்சமாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்;

(எ) பொதுக் கூரையினால் விளைவிக்கப்பட்ட வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான அத்தகைய முறையில் வெப்பக்காப்புச் சாதனம் ஒழுங்கமைக்கப்படுதல் வேண்டும்;

(ஏ) போதிய கொள்ளளவுடனான மின்பிறப்பாக்கியொன்று உயர்த்திக்காக நிறுவப்படுதல் வேண்டுமென்பதுடன், பொது விளக்குகள் தன்னியக்க ஆளியொன்றின்மூலம் ஒளியூட்டப்படுதலும் வேண்டும்;

(ஐ) வதிவிடக் காணித்துண்டுகளுக்கு அணுக்கத்தை வழங்குகின்ற ஏதேனும் செல்வழி, குறைந்தபட்சம் 1.5 மீற்றர் அகலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஒ) மொட்டைமாடிச் சுவர்களின் உயரம், சர்வதேச நியமங்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்;

(ஓ) 5000 சதுர அடிகளைக் கொண்ட பரப்பளவை அல்லது ஐந்து மாடிகளைக் கொண்டுள்ள கட்டடமொன்றின் விடயத்தில், அங்கீகாரம் பெற்ற அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து மண் பற்றிய சான்றிதழொன்று பெறப்படுதல் வேண்டும்;

(ஔ) கூட்டாட்சிக் கட்டடமொன்று தொடர்பில் உத்தரவாதச் சான்றிதழின் நியதிகளின்படி உத்தரவாதக் காலப்பகுதியின்போது எவரேனும் ஒப்பந்தகாரர் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறும்பட்சத்தில், ஆதனத்தின் சொந்தக்காரர், அக்கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் பிணிக்கப்பட்டவராகவுள்ளார்.

பாகம் III

**முதனிலைத் திட்டமிடுதல் அனுமதிப்பு**

9. கூட்டாட்சியாதனங்களின் அபிவிருத்திக்காகத் தேவைப்படுத்தப்பட்ட வழிகாட்டுநெறிகளைப் பெறுவதற்கென, முதனிலை அனுமதிப்புச் சான்றிதழொன்று, இயைபான தகவல்களுடன் சேர்த்து, அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்டதும் அட்டவணை 5இல் கொடுக்கப்பட்ட படிவத்தின்படியானதுமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் பெறப்படுதல் வேண்டும்.

10. முதனிலை அனுமதிப்புச் சான்றிதழுக்கான படிவத்தின் செல்லுபடிக் காலப்பகுதி மூன்றாண்டுகளாதல் வேண்டும்.

பாகம் IV

**கூட்டாட்சியாதனத்தினதும் காணித்துண்டுகளினதும் நிருவாகமும் முகாமையும்**

11. ஏதேனும் கூட்டாட்சியாதனத்தின் அல்லது கூட்டாட்சிக் காணித்துண்டின் முகாமையில், பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவது ஏதேனும் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கடமையாதல் வேண்டும்:-

(அ) பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி வரைபடத்தில் நிறுத்திடங்கள் பொது அம்சங்களாக வரைவிலக்கணங்கூறப்படுமிடத்து, ஒவ்வோர் இருப்பாட்சியாளரும், அத்தகைய நிறுத்திடத்திற்கு வருகின்ற ஒழுங்குவரிசைப்படி அவரது வாகனத்தை அத்தகைய நிறுத்திடத்தில் நிறுத்தி வைப்பதற்குப் பொது உரிமையொன்றைக் கொண்டிருப்பார்.

(ஆ) வதிவிடக் கூட்டாட்சிக் காணித்துண்டொன்றின் சொந்தக்காரர் எவரும், முறையாகத் தயாரிக்கப்பட்ட குத்தகை உடன்படிக்கையொன்றின் மீதன்றி, அத்தகைய காணித்துண்டைக் குறுகிய காலக்குத்தகைக்கு அல்லது வாடகைக்கு மூன்றாந்திறத்தவரொருவருக்குக் கொடுத்தலாகாது.

(இ) கூட்டாட்சி துண்டொன்றின் அரிமானத்தின் அல்லது ஒழுக்கின் விடயத்திலும், அத்தகைய அரிமானத்தின் அல்லது ஒழுக்கின் தன்மை ஒரு தொழினுட்ப அறிக்கையினால் அடையாளங்காணப்பட்டுள்ளவிடத்தும், பொறுப்பாகவுள்ள திறத்தவர் அந்த அரிமானத்தை அல்லது ஒழுக்கைப் பழுதுபார்த்தல் வேண்டுமென்பதுடன், அத்திறத்தவர் அதனைப் பழுதுபார்க்கத் தவறினால், முகாமை கூட்டுத்தாபனம் அதனைப் பழுதுபார்த்து அத்திறத்தவரிடமிருந்து அத்தகைய பழுதுபார்த்தலின் ஆகுசெலவை அறவிடலாம்.

(ஈ) ஆளெவரும், கூட்டாட்சிக் காணித்துண்டொன்றை, அத்தகைய கூட்டாட்சிக் காணித்துண்டின் ஏனைய இருப்பாட்சியாளர்களினால் பொது வாழ்வசதிகளின் பாவனைக்கு முட்டுக்கட்டையிடும் வகையிலான அல்லது அதன் ஏனைய இருப்பாட்சியாளர்களுக்கு வசதியீனம் விளைவிக்கும் வகையிலான அத்தகைய முறையில் பயன்படுத்துதலாகாது.

(உ) ஒரு கூட்டாட்சியாதனத்தில் உயர்த்திகளைத் தொழிற்படுத்துவதற்குப் பொருத்தமான ஆளொருவரைத் தொழிலுக்கமர்த்துதல் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்குக் கட்டாயமானது. அல்லாவிடில், CCTV நிழற்படக்கருவிகளின்மூலம் உயர்த்தியின் உட்புறத்தை அவதானிக்கக்கூடியவரான அலுவலரொருவர் கட்டுப்பாட்டறைக்குத் தொழிலுக்கமர்த்தப்படுதல் வேண்டும்.

(ஊ) முகாமைக் கூட்டுத்தாபனம் தீயணைப்புக்கருவிகளைத் தொடர்ந்து பேணுதலும் அவை பணியாற்றாதொழியாதிருப்பதனைக் கவனித்தலும் வேண்டும்.

(எ) ஏதேனும் முகாமைக் கூட்டுத்தாபனம் சமமான தவணைக் கட்டணங்களின் மீது முகாமைக் கட்டணங்களை அறவிடுமிடத்து, முகாமைக் கூட்டுத்தாபனமானது இவ்வொழுங்குவிதிகளின் திகதியிலிருந்து கூட்டாட்ச்சி துண்டங்களின் பெறுமதியை பகிர்வதற்கு விகிதாசார முறையில் முகாமைத்துவக் கட்டணங்கள் அறவிடுதல் வேண்டும்.

(ஏ) ஒரு கூட்டாட்சியாதனம் பதிவுசெய்யப்படாமை தொடர்பான முறைப்பாட்டின்மீது அதிகாரசபைக்கு முன்னரான, விசாரணையொன்று முடிவுறாதிருக்கையில், ஆளெவரும், அதிகாரசபையின் அனுமதியின்றி ஏனைய கூட்டாட்சிக் காணித்துண்டுகளுள் எவற்றையும் விற்பனைசெய்தலோ, ஈடுவைத்தலோ அல்லது குத்தகைக்குக் கொடுத்தலோ ஆகாது.

(ஐ) கூட்டாட்சியாதனங்களின் கூட்டாட்சி வரைபடங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளபின்னர் அத்தகைய ஆதனங்களின் உரித்துறுதிகள் அவற்றின் கொள்வனையாளர்களுக்கு வழங்கப்பட்டிராதவிடத்து, அவ்வாதனத்தின் சொந்தக்காரர் அல்லது அபிவிருத்தியாளர் ஒருவர், கொள்வனையாளர்களாக வரவுள்ளவர்களின் உரிமைகள் பற்றிய கூட்டமொன்றில் எவையேனும் விதிகளை ஆக்குவதற்குத் தத்துவமெதனையும் கொண்டிருக்கமாட்டார்.

பாகம் V

**நானாவிதம்**

12. ஆளெவரும், ஏதேனும் கூட்டாட்சியாதனம் தொடர்பில் இயைபான உள்ளூரதிகார சபையினால் வழங்கப்பட்ட இசைந்தொழுகுதற் சான்றிதழை உடையவராக இருந்தாலொழிய, அவ்வாதனத்தை இருப்பாட்சி கொள்ளுதலாகாது.

13. இவ்வொழுங்குவிதிகளில் "சட்டம்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் என்று பொருளாதல் வேண்டும்.

[ஒழுங்குவிதி 2 (1)]

**அட்டவணை 1**

அலுவலக முறையான பாவனைக்காக மட்டும்

இல. ............................................ பற்றுச்சீட்டின் திகதி ...................................

கொடுப்பனவுத் திகதி .........................................................................................

செய்முறைப்படுத்தற் கட்டணம் ............................................................................

சோதனை செய்யப்பட்ட திகதி ............... பணச்சிட்டையின் இல. .................

................................. ..................................

பெயர் கையொப்பம்

கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை

**தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்துக்கான பொது வாழ்வசதிகளும் பொது அம்சங்களும் தொடர்பிலான சான்றிதழுக்கான விண்ணப்பம்**

1. சொந்தக்காரரின் /சொந்தக்காரர்களின் பெயர்/பெயர்கள் : ……………………………………………….....
2. தேசிய அடையாள அட்டை இல./கம்பெனிப் பதிவிலக்கம் : …………………………………………….
3. முகவரி : ………………………………………………………………………………………………….
4. மின்னஞ்சல் முகவரி : ……………………………………………………………………………………
5. தொலைபேசி இல : …………………………………………………………………
6. கூட்டாட்சியாதனத்தின் பெயர் : ……………………………………………………………………….
7. கூட்டாட்சியாதனத்தின் முகவரி : ……………………………………………………………………….
8. கூட்டாட்சிக் காணித்துண்டுகளின் எண்ணிக்கை. I.வதிவிட……………… II. வர்த்தக ……………………
9. சதுர மீற்றர்களில் கூட்டாட்சியாதனத்தின் பரப்பளவு.

   I. நிலஅளவையாளரின் பெயர்: ……………… II. கூட்டாட்சி வரைபட இல: ……………………………
10. ஒரு கம்பெனியின் விடயத்தில், கம்பெனியின் விபரங்கள்: ………………………………………………

11. காணியின் உரித்துறுதி : ……………………………………………………………………………………

12. கருத்திட்டத்துக்காக ஏதேனும் கடன் பெறப்பட்டிருப்பின், ஈடுகள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் பற்றிய விபரங்கள் : ………………………………………………………………………………………………

13. விற்பனை உடன்படிக்கைகள் மற்றும் கூட்டாட்சிக் காணித்துண்டுகளினது சொந்தக்காரர்களின் விபரங்கள்: …… …………………………………………………………………………………………..

14. கூட்டாட்சி வரைபடம் எக்காலப்பகுதிக்காகப் பதிவுசெய்யப்படுவதற்கு உட்கருதப்படுகின்றது: ……………

15. பின்னிணைப்புக்கள்:

(I) மாநகர சபையினால்/நகர சபையினால்/பிரதேச சபையினால் கடைசித் தடவையாக அங்கீகரிக்கப்பட்ட, திருத்தங்களுடனான கட்டிட வரைபடம் (மூலப்பிரதி மற்றும் வரைவுபெற்ற ஒரு கட்டிடக் கலைஞரினால் மற்றும் வரைவுபெற்ற ஒரு கட்டமைப்புச்சார் பொறியியலாளரினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(II) கூட்டாட்சி வரைபடம் (மூலப்பிரதி, இணைப்பிரதி மற்றும் முப்பிரதி)

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(III) இயைபான உள்ளூரதிகாரசபையினால் வழங்கப்பட்ட இசைந்தொழுகற் சான்றிதழ் (மூலப்பிரதி மற்றும் இருபிரதிகள்)

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(IV) காணியின் உரித்துறுதி
(மூலப்பிரதி மற்றும் இரு பிரதிகள்)

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(V) பேணுகை தொடர்பிலான முகாமைத்துவ உத்தேசங்கள் (ஒரு கம்பனியின் விடயத்தில், இரு பணிப்பாளர்களினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்)

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(VI) நிர்மாணம் தொடர்பாகப் பின்வரும் தகவல்கள்:

(அ) நீர் வழங்கல் வரைபடம்
(ஆ) கழிவு நீரை அகற்றுவதற்கான வரைபடம்
(இ) கழிவு நீர்க்கால் அமைப்புமுறை வரைபடம்
(ஈ) மழைநீர் வடிந்தோடுவதற்கான வரைபடம்
(உ) குப்பைகூளத்தை முகாமை செய்வதற்கான வரைபடம்
(ஊ) மின்வழங்கலுக்கான வரைபடம்
(எ) தொலைபேசி வசதிகளை வழங்குவதற்கான வரைபடம்
(ஏ) மின்னுயர்த்திகளை வழங்குவதற்கான வரைபடம்
(ஐ) தீப்பாதுகாப்புகளை வழங்குவதற்கான வரைபடம்
(ஒ) கட்டமைப்புச்சார் வரைபடங்கள்
(ஓ) ஏனைய சேவைகளுக்கான வரைபடங்கள்

இவ்வரைபடங்கள் எல்லாம் தகைமைபெற்ற ஆளினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்போந்த தகவல்கள் சரியானவையென நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

| …………………………….. | ………………………………… | ………………………………… |
|---|---|---|
| உரிமையாளரின்/உரிமையாளர்களின் விண்ணப்பகாரரின் கையொப்பம் | வரைவுபெற்ற பொறியியலாளரின்/ வரைபு பெற்ற கட்டிடக் கலைஞரின் கையொப்பம் | பதிவுசெய்யப்பட்ட நிலஅளவையாளரின் கையொப்பம் |
| ………………………………… | ………………………………… | ………………………………… |
| தேதி | தேதி | தேதி |

அலுவலக பாவனைக்காக

ஏனைய குறிப்புகள்

[ஒழுங்குவிதி 2 (2)]

**அட்டவணை 2**

| அலுவலக முறையான பாவனைக்காக மட்டும் |
|---|
| இல. ............................................ பற்றுச்சீட்டின் திகதி .................................... |
| கொடுப்பனவுத் திகதி .......................................................................................... |
| செய்முறைப்படுத்தற் கட்டணம் ............................................................................ |
| சோதனை செய்யப்பட்ட திகதி ............... பணச்சிட்டையின் இல. ................. |
| .................................. .................................. |
| பெயர் கையொப்பம் |

**கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை**

தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்துக்கான பொது வாழ்வசதிகளும் பொது அம்சங்களும் தொடர்பிலான சான்றிதழுக்கான விண்ணப்பம்.

1. உரிமையாளரின்/ உரிமையாளர்களின் பெயர்/பெயர்கள் : ........................................................
2. தேசிய அடையாள அட்டை இல./கம்பனிப் பதிவிலக்கம் : .....................................................
3. முகவரி : ......................................................................................................................
4. மின்னஞ்சல் முகவரி : ....................................................................................................
5. தொலைபேசி இல : .....................................................................
6. தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்தின் பெயர் : ..................................................................
7. தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்தின் முகவரி : ...............................................................
8. கூட்டாட்சிக் காணித்துண்டுகளின் எண்ணிக்கை : ....................................................................
9. தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்திலான சதுர மீற்றர்களின் எண்ணிக்கை: ................................
10. பின்னிணைப்புக்கள்:

(i) பிரதேச சபை, நகர சபை அல்லது மாநகரசபையினாலான திருத்தங்களுடன் கடைசியாக அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடம்.

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(ii) தற்போதைக்கான கூட்டாட்சி வரைபடம் (மூலப்பிரதி, இணைப்பிரதி மற்றும் முப்பிரதி)

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(iii) 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியதிகளின்படி தகைமைபெற்ற ஆளினால் தயாரிக்கப்பட்டுக் கையொப்பமிடப்பட்ட, நிர்மாணம் தொடர்பான உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(iv) காணியின் உரித்துறுதி (மூலப்பிரதியும் மற்றும் இருபிரதிகளும்)

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(v) பேணுகை தொடர்பிலான முகாமைத்துவ உத்தேசங்கள் (கம்பனியொன்றின் விடயத்தில் இரு பணிப்பாளர்களினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்)

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(vi) உத்தேசிக்கப்பட்ட நிர்மாணம் தொடர்பான பின்வரும் தகவல்கள் :

(அ) நீர் வழங்கல்

(ஆ) கழிவு நீரையகற்றுவதற்கான வரைபடம்

(இ) கழிவு நீர்க்கால் அமைப்புமுறை

(ஈ) மழைநீர் வடிந்தோடுதல்

(உ) குப்பைகூளத்தை முகாமை செய்வதற்கான வரைபடம்

(ஊ) மின்வழங்கல்

(எ) தொலைபேசி வசதிகளை வழங்குவதற்கான வரைபடம்

(ஏ) மின்னுயர்த்திகளை வழங்குவதற்கான வரைபடம்

(ஐ) தீப்பாதுகாப்பை வழங்குவதற்கான வரைபடம்

(ஒ) ஏனைய சேவைகளுக்கான வரைபடங்கள்

இவ்வரைபடங்கள் எல்லாம் தகைமைபெற்ற ஆளினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்போந்த தகவல்கள் சரியானவையென நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| ........................................ | ........................................ | ........................................ |
| உரிமையாளரின்/உரிமையாளர்களின் விண்ணப்பகாரரின் கையொப்பம் | வரைவுபெற்ற பொறியியலாளரின்/ வரைபுபெற்ற கட்டிடக் கலைஞரின் கையொப்பம் | பதிவுசெய்யப்பட்ட நிலஅளவை யாளரின் பையொப்பம் |
| ........................................ | ........................................ | ........................................ |
| தேதி | தேதி | தேதி |

அலுவலக பாவனைக்காக

ஏனைய குறிப்புகள்

[ஒழுங்குவிதி 2 (3)]

**அட்டவணை 3**

அலுவலக முறையான பாவனைக்காக மட்டும்

இல. ............................................ பற்றுச்சீட்டின் திகதி ...................................

கொடுப்பனவுத் திகதி ........................................................................................

செய்முறைப்படுத்தற் கட்டணம் ............................................................................

சோதனை செய்யப்பட்ட திகதி ............... பணச்சிட்டையின் இல. .................

................................ ..................................

பெயர் கையொப்பம்

**கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை**

பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் பொது வாழ்வசதிகள் மற்றும் பொது அம்சங்கள் தொடர்பிலான சான்றிதழுக்கான விண்ணப்பம்.

1. உரிமையாளரின் /உரிமையாளர்களின் பெயர்/பெயர்கள் : ……………………………………………………...
2. தேசிய அடையாள அட்டை இல./கம்பனிப் பதிவிலக்கம் : ……………………………………………….

3. முகவரி : ..........................................................................................................
4. மின்னஞ்சல் முகவரி : ....................................................................................
5. தொலைபேசி இல : ...............................................................
6. பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் பெயர் : ......................................................
7. பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் முகவரி : ..................................................
8. கூட்டாட்சிக் காணித்துண்டுகளின் எண்ணிக்கை. I.வதிவிட.................... II. வர்த்தக ....................
9. சதுர மீற்றர்களில் கூட்டாட்சியாதனத்தின் பரப்பளவு.
I. நிலஅளவையாளரின் பெயர்: .................. II. பகுதியளவிலான கூட்டாட்சி வரைபட இல: ...........
10. சான்றுப்படுத்தப்பட்ட கம்பனியின் விபரங்கள்: .........................................................
11. காணியின் உரித்துறுதி : ..................................................................................
12. கருத்திட்டத்துக்காக ஏதேனும் கடன் பெறப்பட்டிருப்பின், ஈடுகளின் அல்லது வேறு கடப்பாடுகளின் விபரங்கள்: .............................................................................................
13. விற்பனை உடன்படிக்கைகள் மற்றும் கூட்டாட்சிக் காணித்துண்டுகளினது சொந்தக்காரர்களின் விபரங்கள்: .... ...........................................................................................
14. பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம் எக்காலப்பகுதிக்காகப் பதிவுசெய்யப்படுவதற்கு உட்கருதப்படுகின்றது: .....................................................................................
15. பின்னிணைப்புக்கள் :

(i) மாநகரசபையினால்/நகர சபையினால்/பிரதேச சபையினால் கடைசித் தடவையாக அங்கீகரிக்கப்பட்ட, திருத்தங்களுடனான கட்டட வரைபடம் (மூலப்பிரதியும் இரு பிரதிகளும் வரைவுபெற்ற கட்டிடக் கலைஞரினாலும் வரைவுபெற்ற கட்டமைப்புச்சார் பொறியியலாளரினாலும் சான்றுப்படுத் தப்படுதல் வேண்டும்.

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(ii) பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம் (மூலப்பிரதி, இணைப்பிரதி மற்றும் முப்பிரதி)

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(iii) கட்டிமுடிக்கப்பட்ட காணித்துண்டுகளுக்கான இசைந்தொழுகற் சான்றிதழ்

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(iv) 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியதிகளின்படி தகைமைபெற்ற ஆளினால் தயாரிக்கப்பட்டுக் கையொப்பமிடப்பட்ட, நிர்மாணம் தொடர்பான உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(v) காணியின் உரித்துறுதி (மூலப்பிரதி மற்றும் இரண்டு பிரதிகள்)

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(vi) பேணுகை தொடர்பிலான முகாமைத்துவ உத்தேசங்கள் (ஒரு கம்பனியின் விடயத்தில், இரு பணிப்பாளர்களினால் கையொப்பமிடப் பட்டிருத்தல் வேண்டும்)

| குறிப்பீட்டில. | தேதி |
|---|---|
| | |

(vii) உத்தேசிக்கப்பட்ட நிர்மாணம் தொடர்பாகப் பின்வரும் தகவல்கள்:

அ. நீர் வழங்கல் வரைபடம்
ஆ. கழிவு நீரையகற்றுவதற்கான வரைபடம்
இ. கழிவு நீர்க்கால் அமைப்புமுறை வரைபடம்
ஈ. மழைநீர் வடிந்தோடுவதற்கான வரைபடம்
உ. குப்பைகூளத்தை முகாமை செய்வதற்கான வரைபடம்
ஊ. மின்சார வழங்கல்
எ. தொலைபேசி வசதிகளை வழங்குவதற்கான வரைபடம்
ஏ. மின்னுயர்த்திகளை வழங்குவதற்கான வரைபடம்
ஐ. தீப்பாதுகாப்புகளை வழங்குவதற்கான வரைபடம்
ஒ. ஏனைய சேவைகளுக்கான வரைபடங்கள்

இவ்வரைபடங்கள் எல்லாம் தகைமைபெற்ற ஆளினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்போந்த தகவல்கள் சரியானவையென நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| …………………………………….. | ……………………………………… | ……………………………………… |
| உரிமையாளரின்/உரிமையாளர்களின் விண்ணப்பகாரரின் கையொப்பம் | வரைவுபெற்ற பொறியியலாளரின்/ வரைபுபெற்ற கட்டிடக் கலைஞரின் கையொப்பம் | பதிவுசெய்யப்பட்ட நிலஅளவையாளரின் பையொப்பம் |
| ……………………………………… | ……………………………………… | ……………………………………… |
| தேதி | தேதி | தேதி |

அலுவலக பாவனைக்காக

ஏனைய குறிப்புகள்

ஒழுங்குவிதி 3 (3)

**அட்டவணை 4**

*3 ஆம் ஒழுங்குவிதியின் 3 ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இயைபான தகைமைபெற்ற ஆள் பின்வருவோராதல் வேண்டும்:*

(i) கூட்டாட்சி வரைபடம், பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம், அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி வரைபடம் - பதிவுசெய்யப்பட்ட உரிமமளிக்கப்பட்ட நிலஅளவையாளர் அல்லது நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆள்.

(ii) கட்டமைப்புச்சார் சான்றிதழ் மற்றும் வரைபடம் - இலங்கைப் பொறியியல் நிறுவகத்திடம் கட்டமைப்புச்சார் பொறியியலாளரொருவராகப் பதிவுசெய்யப்பட்ட வரைவுபெற்ற கட்டமைப்புச்சார் பொறியியலாளர்.

(iii) கட்டடத்துக்கான நீர்வழங்கல் தொடர்பான வரைபடம் மற்றும் இபையான சான்றிதழ் - இலங்கைப் பொறியியல் நிறுவகத்தில் கட்டடச் சேவைகளைச் சேர்ந்த வரைவுபெற்ற சிவில் பொறியியலாளர் ஒருவர்.

(iv) கட்டடத்தில் கழிவுநீரையகற்றுவதற்கான வரைபடம் மற்றும் இபையான சான்றிதழ் - இலங்கைப் பொறியியல் நிறுவகத்தில் கட்டடச் சேவைகளைச் சேர்ந்த வரைவுபெற்ற சிவில் பொறியியலாளர் ஒருவர்.

(v) கட்டிடத்திலான கழிநீர் முறைமையும் இயைபான சான்றிதழும் - இலங்கைப் பொறியியல் நிறுவகத்தில் கட்டடச் சேவைகளைச் சேர்ந்த வரைவுபெற்ற சிவில் பொறியியலாளர் ஒருவர்.

(vi) மழைநீர் வடிந்தோடுவதற்கான வரைபடமும் இயைபான சான்றிதழும் - இலங்கைப் பொறியியல் நிறுவகத்தில் கட்டடச் சேவைகளைச் சேர்ந்த வரைவுபெற்ற சிவில் பொறியியலாளர் ஒருவர்.

(vii) குப்பைகூளம் அகற்றுதல் - இயைபான உள்ளூரதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தேசம்.

(viii) மின் வழங்குதல் - இலங்கைப் பொறியியல் நிறுவகத்தில் கட்டடச் சேவைகளைச் சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட வரைவுபெற்ற மின்சாரப் பொறியியலாளர்.

(ix) தொலைபேசி வசதிகளை வழங்குதல் - இலங்கைப் பொறியியல் நிறுவகத்தில் கட்டடச் சேவைகளைச் சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட வரைவுபெற்ற மின்சாரப் பொறியியலாளர்.

(x) மின்னற் பாதுகாப்பு – இலங்கைப் பொறியியல் நிறுவகத்தில் கட்டடச் சேவைகளைச் சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட வரைவுபெற்ற மின்சாரப் பொறியியலாளர்.

(xi) மின்னுயர்த்தி - இலங்கை பொறியியல் நிறுவகத்தில் கட்டிட சேவைகளுக்காக இணைக்கப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட பட்டயம்பெற்ற மின்பொறியியலாளர் அல்லது இயந்திரவியல் பொறியியலாளர்.

(xii) தீயணைப்புச் சான்றிதழ் - மாநகரசபையின் தீயணைப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

(xiii) வாயு வழங்குதல் - இலங்கைப் பொறியியல் நிறுவகத்தில் கட்டடச் சேவைகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட பொறிமுறைப் பொறியியலாளர்.

(xiv) மண்பற்றிய சான்றிதழ் - ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்.

(xv) செலவினம் மீதான மதிப்பீடுகள் - வரைவுபெற்ற சிவில் பொறியியலாளரினால் அல்லது வரைவுபெற்ற அளவுகள் அளவீட்டாளரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஒழுங்குவிதி 9)

## அட்டவணை 5

உத்தேசிக்கப்பட்ட கூட்டாட்சியாதன அபிவிருத்திக்கான முதனிலைத் திட்டமிடுதல் அனுமதிப்புக்கான விண்ணப்பம்

| அலுவலக பாவனைக்காக மட்டும் |
|---|
| இல. ............................................ |
| செய்முறைப்படுத்தற் கட்டணம் ............................................................................ |
| பற்றுச்சீட்டிலக்கமும் திகதியும் .................................... |

பொது முகாமையாளர்,
கூட்டாட்சி முகாமை அதிகாரசபை.

.......................................
.......................................
.......................................
....................................... என்பவரிடமிருந்து

......................... பட்டினத்தில் ...................... வட்டாரத்தில் .............................. தெருவில் ................. ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்ட ...............இல் கூட்டாட்சி அபிவிருத்திக்கான முதனிலைத் திட்டமிடுதல் அனுமதிப்புக்காக நான்/நாம் இத்தால் விண்ணப்பிக்கின்றேன்/விண்ணப்பிக்கின்றோம்.

நான்/நாம் பின்வரும் தகவல்களை இணைப்பிரதியில் சமர்ப்பிக்கின்றேன்/சமர்ப்பிக்கின்றோம்:

1:6000 என்ற பரப்பளவுக்குக் குறையாமலும் அருகாமையிலுள்ள காணி தொடர்பான நிலஅளவை வரைபடத்துடனும், குறிப்பீடு செய்யப்பட்ட ஆதனத்தின் அமைவிடம்.

பின்னிணைப்பில் காட்டப்பட்ட தகவல்களும் தரவுகளும் உட்பட, உத்தேசிக்கப்பட்ட கட்டட வரைபடம்.
காணியின் உரித்துறுதி.

முதனிலைத் திட்டமிடுதல் அனுமதிப்பு, கூட்டாட்சியாதன அபிவிருத்திக்கான வழிகாட்டியாக மட்டுமே உள்ளதென நான்/நாம் அறிந்துள்ளேன்/அறிந்துள்ளோம்.

ஆதன உரிமையாளரின் சொத்தாண்மையைக் காட்டுகின்ற அவரது கடிதம் இணைக்கப்படுகின்றது.

மேற்போந்த தகவல்கள் சரியானவையென நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

............................... ..................................
தேதி உரிமையாளரின்/விண்ணப்பதாரரின் கையொப்பம்.

**பின்னிணைப்புக்கள்**

1. (1) உரிமையாளர் பற்றிய தகவல்கள் :
பெயர் : ..........................................................................................
முகவரி : ..........................................................................................
தொலைபேசி இல. : ..........................................................................................

(2) காணியின் அமைவிடம் :
(அ) அமைவிடம் : ..........................................................................................
வரிமதிப்பீட்டில. : ..........................................................................................
உள்ளூரதிகாரசபை : ..........................................................................................
தெரு : ..........................................................................................
நிலஅளவையாளரினது வரைபடத்தின் இலக்கம் : ..............................................
(வரைபடம் இணைக்கப்படுதல் வேண்டும்.)

(ஆ) காணி பற்றிய தகவல் :
(i) காணியின் தன்மை : ..........................................................................
சதுர அடிகளின் பரப்பளவு : ..........................................................................
காணியின் தற்போதைய பாவனை : ..........................................................

(ii) கட்டடமொன்றிருப்பின், விபரங்கள் :
மாடிகளின் எண்ணிக்கை : ..................................................................
சதுர மீற்றர்களில் அதிகபட்ச உயரம் : ..................................................
சதுர மீற்றர்களில் தளப்பரப்பு : ..........................................................
(அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடம், ஏதேனுமிருப்பின், இணைக்கப்படுதல் வேண்டும்.)

(3) உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டம் பற்றிய விபரங்கள்:
(அ) கருத்திட்டத்தின் தன்மை : ..................................................................
(ஆ) வரைபடத்தின் உருவரைப்படம் : ..........................................................
(வரைபடம் இணைக்கப்படுதல் வேண்டும்)

(4) கிடைக்கக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகள்
(அ) அணுக்கத்துக்கான வசதிகள் : ..................................................................
(ஆ) நீர்வழங்கல் : ..................................................................
(இ) கழிவுநீர்க்கால் அமைப்புமுறை : ..................................................................
(ஈ) மின்வழங்கல் : ..................................................................
பரிகரிப்புப் பொறித்தொகுதி (கழிவுநீர்க்கால் அமைப்புமுறை/கழிவுநீர்): ........................
குப்பைகூளம் அகற்றுதல் : ..........................................................

(5) (அ) சதுரமீற்றர்களில் தளப்பரப்பு : ..........................................................................

(ஆ) மாடிகளின் எண்ணிக்கையும் கட்டிடத்தின் உயரமும் : ..........................................................

(இ) தளப்பரப்பின் முழுக் : <u>தளப்பரப்பின் பரப்பளவு x 100</u>
கவிவளவு காணியின் பரப்பளவு

(ஈ) உத்தேசிக்கப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கையுடன் உத்தேசிக்கப்பட்ட கட்டடத்தின் விபரம் : ..............................

(உ) தளப்பரப்புப்பற்றிய விபரங்கள் (ச.மீற்றர்கள்)
வதிவிடம் :..........................................................................
வதிவிடஞ்சாரா :..........................................................................
அலுவலகங்கள்:..........................................................................
சிற்றுண்டிச்சாலைகள்:..........................................................................
ஏனையவை:..........................................................................
முழுப்பரப்பு:..........................................................................

(ஊ) உத்தேசிக்கப்பட்ட நிறுத்திடங்கள்

கார்கள் :...........................................................................

ஏனையவை :...........................................................................

(6) கிடைக்கக்கூடிய பொது வாழ்வசதிகள்

உடற்பயிற்சி நிலையம் : ..............................................................................

நீச்சல் தடாகங்கள் : ..............................................................................

சமுதாய நிலையங்கள் : ..............................................................................

முகாமைக் கூட்டுத்தாபனக் கூட்ட மண்டபங்கள் : ..................................................

பேணுகை அலுவலகங்கள் : ..............................................................................

சாரதிகள் ஓய்வறைகள் : ..............................................................................

பாதுகாப்பு நிலையங்கள் : ..............................................................................

பொது மலசலகூடங்கள் : ..............................................................................

(சாரதிகள்/பாதுகாப்புப் பணியாட்டொகுதியினர்/உடல் தகுதியீனமுள்ளோர்)

மேற்கூரை அடுக்குத்தளம் : ..............................................................................

மேலேயுள்ள தகவல்கள் சரியானவையென நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

................................. ....................................

திகதி உரிமையாளரின்/உரிமையாளர்களின் கையொப்பம்/கையொப்பங்கள்.

2. அதிகாரசபையானது, 3 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பின்வரும் கருமங்கள் தொடர்பாகச் சட்டத்தின்கீழ், விடயத்துக்கேற்ப, அபிவிருத்தியாளர், ஆதனச்சொந்தக்காரர், கூறுச் சொந்தக்காரர் மற்றும் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கெதிராக நடவடிக்கையெடுக்கலாம்.

(அ) பொய்யான தகவலைக் கொடுத்துதவுதல்

(ஆ) அளவுக்குறிப்பீடுகளுக்கு இசைந்தொழுகாத வடிவமைப்புகள், சேவை வரைபடங்கள் மற்றும் முகாமை உத்தேசங்கள்.

(இ) விதிக்கப்பட்ட ஏற்பாடுகளை மீறுதல்.

(ஈ) சான்றிதழ்களின் நிபந்தனைகளை மீறுதல்.

(உ) விதித்துரைக்கப்பட்ட சேவைக் கட்டணங்களைச் செலுத்தாமை.

3. கூட்டாட்சிக் காணித்துண்டுகளும் துணைச் சிறுகூறுகளும் தவிர்ந்த கூட்டாட்சியாதனத்தினுள்ளான எல்லா அம்சங்களும் பொது அம்சங்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், கூட்டாட்சிக் காணித்துண்டுகளினதும் துணைச் சிறுகூறுகளினதும் எல்லா எல்லைகளும், இணைந்துள்ள கூறின் அல்லது பொது அம்சத்தின் மத்திய கோடாகவிருத்தலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய நியதிகள், அருகாமையிலுள்ள ஆதனத்தினால் எல்லைப்படுத்தப்பட்ட ஒரு கட்டடத்தின் எல்லைச்சுவர்கள் தொடர்பில் ஏற்புடையற்பாலனவாதலும் வேண்டும்.

4. கூட்டாட்சியாதனத்தின் முகாமை உத்தேசங்கள் தொடர்பாகத் தகைமைபெற்ற ஆளிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையொன்று, அதிகாரசபையிடமிருந்து பொது வாழ்வசதிகளுக்காகவும் பொது அம்சங்களுக்காகவும் சான்றிதழொன்றைப் பெறுவதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

5. ஒரு கூட்டாட்சிக் கட்டடமொன்றை நிர்மாணிப்பதில் சேவைக் கருமபீடங்கள் வடிவமைக்கப்படும்போது, இலகுவாகப் பேணப்படக்கூடிய அத்தகையவொரு வகையில் அவை அமைந்திருத்தல் வேண்டும்.

6. சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனம், தவறாமல், அதிகாரசபையிடம் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

7. ஒரு கூட்டாட்சியாதனக் காணித்துண்டின் பாவனை அல்லது கொள்ளுதல் தொடர்பாக அல்லது அக்காணித்துண்டின் பொது வாழ்வசதிகளின் அல்லது பொது அம்சங்களின் பாவனை தொடர்பாகச் உரிமையாளருக்கும் இருப்பாட்சியாளருக்கும், அல்லது இரு உரிமையாளர்களுக்கு இடையே பிணக்கொன்று எழுமிடத்து, அப்பிணக்குத் தொடர்பாக முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு முறைப்பாடொன்று செய்யப்படுதல் வேண்டும். முகாமைக் கூட்டுத்தாபனம் அப்பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கு முயற்சித்தல் வேண்டுமென்பதுடன், முகாமைக் கூட்டுத்தாபனத்தின் முடிபுடன் எவரேனும் திறத்தவர் அதிருப்தியடைந்தால், அத்திறத்தவர் அம்முடிபுக்கெதிராக அதிகாரசபைக்கு மேன்முறையீடொன்றைச் செய்தலும்வேண்டும்.

8. நம்புறுதிச் சான்றிதழ்கள் :

நீர்க்காப்பு முறைமை - நீர்க்காப்பு முறைமை, ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் கையாளப்படுதல் வேண்டும். நம்புறுதிக் காலப்பகுதி 10 ஆண்டுகளாகும்.

தீக்காப்புறுதி - ஏற்றங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பெனியிடமிருந்து ஓராண்டுக்குப் பெறப்பட்ட தீக்காப்புறுதி.

மின்னற் காப்புறுதி - ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட 10 ஆண்டுகளுக்கான நம்புறுதிச் சான்றிதழ்.

மின்பிறப்பாக்கி - ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ஓராண்டுக்கான நம்புறுதிச் சான்றிதழ்.

நீர்ப்பம்பிகள் - ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ஓராண்டுக்கான நம்புறுதிச் சான்றிதழ்.

மின்னுயர்த்திகள் - ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ஓராண்டுக்கான நம்புறுதிச் சான்றிதழ்.

07-579/ 2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.